**செ.வெ.எண்:39** **நாள்: 23.01.2019**

# பத்திரிக்கைச் செய்தி

தமிழக அரசின் அம்மா இருசக்கர வாகன திட்டத்தின்கீழ் 2018-19ஆம் ஆண்டிற்கு அரியலூர் மாவட்டத்தில் உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனத்திற்கான மானியம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் சமர்பிக்க **31.01.2019** வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே, விண்ணப்பிக்க விரும்புவோர் அந்தந்த பகுதிகளில் உள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் விண்ணப்பங்கள் இலவசமாக பெற்று விண்ணப்பிக்கலம். தகுதியான பயனாளிகளின் விண்ணப்பங்கள் மாவட்ட தேர்வுக்குழுவால் தேர்வு செய்யப்பட்டு, வாகனத்திற்கான மானியம் அவரவர் வங்கி கணக்கில் நேரடியாக விடுவிக்கப்படும்.

இருசக்கர வாகனத்திற்கான மானியம் பெறுவொர் சில ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகிறது. அதன்படி வயதிற்கான சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் (ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம் / பழகுநர் உரிமம் (LLR), வாக்காளர் அடையாள அட்டை இவைகளில் ஏதேனும் ஒன்று) ஓட்டுநர் உரிமம், வருமான சான்றிதழ் (வேலை அளிப்பவரிடமிருந்து பெற வேண்டும்) வேலையின் தன்மை குறித்த சான்றிதழ் ஆதார் அட்டை, கல்விக்கான சான்றிதழ் (8 ஆம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும்) கடவு சீட்டு அளவு புகைப்படம், ஜாதி சான்றிதழ் (தாழ்த்தப்பட்ட பழங்குடியின வகுப்பினராக இருந்தால்) ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**